# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2040 (கார்த்திகை-மார்கழி) டிசம்பர் 2009 ஏர்-24, உழவு-12, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
கே.ஆர்.பி.மோகன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
28353214
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : கே.ஆர்.பி.மோகன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்

| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| செயலாளர் அறிக்கை | - | 3 |
| இளம் சாதனையாளர் | - | 4 |
| ஆசையைப் பற்றிய தெளிவு | - | 5 |
| அதனதன் காலம் | - | 7 |
| அறுவை சிகிச்சை | - | 9 |
| ஐக்கிய நாடுகள் சபை | - | 10 |
| தேசிய சின்னங்கள் | - | 13 |
| நினைவலைகள் | - | 16 |
| மங்கல வாழ்த்து | - | 17 |
| மணமகள் தேவை | - | 20 |
| மணமாலை | - | 21 |
| வானம் தொடலாம் வாங்க ! | - | 22 |
| மணமகள் தேவை | - | 26 |
| மணமகன் தேவை | - | 30 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு - கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்புடையீர், வணக்கம்.



பொதுச் சேவையில் இறங்கியிருக்கின்ற அனைவரும் காலத்திற்கேற்ப மாற வேண்டும். கொங்கு சமுதாய முன்னேற்றத்தில் ஈடுபட்டிருக்கிற அனைவரும், நாம் எடுக்கின்ற முயற்சிகள் அனைத்தும் நமது இலக்கை நோக்கி இருக்கிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். வருடத்தில் 10 பேருக்கு கல்வி உதவித் தொகை, 20 பேருக்கு பொறியியல் கல்லூரி இடங்கள், 50 பேருக்கு மருத்துவ உதவி, 100 பேருக்கு வேலை என்று சென்னை சங்கமும் மற்ற சங்கங்களும் செய்வதைப் பாராட்டுகிறேன். ஆனால் இது மட்டுமே நம் சமுதாயத்தை முன்னேற்றிவிடாது. நாமும் சென்னையில் கூட்டங்களைக் கூட்டி சமுதாய மக்களுக்கு உதவியைச் செய்கிறோம். உதவி தேவைதான். ஆனால் இது மட்டுமே சமுதாய உரிமைகளைப் பெற உதவிடாது.

கல்லூரிகளில், மற்றவர்களைப் போல நாமும் படிக்க இலவச இடங்கள் வேண்டும். மற்றவர்களுக்கு எவ்வளவு மதிப்பெண்களுக்குக் கிடைக்கிறதோ அதே அளவுக்கு நமது மாணவர்களுக்கும் கிடைக்கவேண்டும். நம் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு அரசுவேலைகளில் நம் சமுதாய இளைஞர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும். குறைந்தபட்சம், அரசு மற்றும் காவல் துறை அலுவலகங்களில் நாம் மதிக்கப்பட வேண்டும். இதுவெல்லாம் நடக்க வேண்டுமென்றால் நாம் அரசியல் அங்கீகாரம் பெற்றாக வேண்டும். அப்போது தான் நம் சமுதாயம் மொத்தமாக வளர்ச்சி பெறும்.

எல்லா ஊர் சங்கங்களும் தம்மால் முடிந்தவரை அவரவர் பகுதிகளில் உதவிகளைச் செய்தாலும், அனைவரும் ஒட்டுமொத்தமான அரசியல் அங்கீகாரத்தைப் பெருகின்ற முயற்சிகளுக்கு ஆதரவு தரவேண்டும். அரசியல் அங்கீகாரம் பெற்று அதிகாரத்துக்கு வந்த சமுதாயங்களெல்லாம் எல்லா சலுகைகளையும் அரசாங்கத்திடமிருந்து பெறுகிறார்கள். நாம் மட்டும் ஏமாற வேண்டுமா?

என் அன்பு கொங்கு சொந்தங்களே! தூங்கியது போதும். விழித்தெழுங்கள். நாம் ஒரு வேலையில் இறங்கத்தான் தாமதமாகும். இறங்கிவிட்டால் நம்மை தடுத்து நிறுத்த யாராலும் முடியாது. நமது கடின உழைப்பிற்கும், விடாமுயற்சிக்கும் உலகில் யாரையும் இணையாகச் சொல்லமுடியாது. தனிமனிதனாக எதையும் சாதிக்க முடியாது.

ஒன்றுபடுவோம் ! உயர்வடைவோம் !

நன்றி

அன்புடன்
கோ்.ஆர்.பி.மோகன், தலைவர்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 37,43,942 |
| 774 | 42 | S.அருணாச்சலம் | 1,00,000 |
| 775 | | R.சுரேஷ் | 1,000 |
| 776 | | S.கவின்ராஜ் | 1,000 |
| 777 | | N.ரமேஷ் | 1,000 |
| 778 | | S.முருகேசன் | 1,000 |
| 779 | | A.அழகேசன் | 1,000 |
| 780 | | S.ராஜவேல் | 1,000 |
| 781 | | R.தங்கராஜ் | 1,000 |
| 782 | | T.K.K.சேகரன் | 1,000 |
| 783 | | P.முருகேசன் | 1,000 |
| 784 | | K.வெங்கடேஷ்வரன் | 1,000 |
| 785 | | K.வெங்கடாசலம் | 1,000 |
| 786 | | P.பழனிசாமி | 1,000 |
| 787 | 2719 | N.மணிகண்டன் | 1,000 |
| 788 | | K.அபிநயா LH | 1,000 |
| 789 | 363 | Dr.K.செந்தமிழ் செல்வி | 1,000 |
| 790 | | K.மோகனசுந்தரம் | 1,000 |
| 791 | | K.இன்பவல்லி L.H. | 1,000 |
| 792 | | கிருஷ்ணகுமார் G.H. | 1,000 |
| 793 | | S.பன்னீர்செல்வம் G.H. | 1,000 |
| 794 | 2422 | R.ரகுநாத் | 1,000 |
| 795 | 2312 | V.M.பழனிசாமி | 1,000 |
| 796 | | V.S.சங்கர் | 1,000 |
| 797 | | P.R.சூர்யா G.H. | 1,000 |
| 798 | | K.அனிதா L.H. | 1,000 |
| 799 | 2306 | K.செல்வராஜ் | 1,000 |
| 800 | | Dr. D.K.ரகு | 1,000 |
| 801 | | S.P.உமாசங்கர் | 1,000 |
| 802 | | S.P.சந்திரசேகர் | 1,000 |
| 803 | | K.E.கதிர்பிரகாஷ் | 1,000 |
| 804 | | C.ஹேம்ராஜ் காங்கேயன் | 1,000 |
| 805 | | S.சுரேஷ்குமார் | 1,000 |
| 806 | | R.மோகனசுந்தரம் | 1,000 |
| 807 | | S.P.லோகநாதன் | 1,000 |
| 808 | | K.ராஜீ | 1,000 |
| 809 | | R.சரண்யா L.H. | 1,000 |
| 810 | | R.ரதி L.H. | 1,000 |
| 811 | | P.தியாகு G.H. | 1,000 |
| 812 | | R.சசிரேகா L.H. | 1,000 |
| 813 | | S.திவ்யா L.H. | 1,000 |
| | | மொத்தம் | **38,82,942** |

# கொங்கு இளம் சாதனையாளர்



## ரோமா சந்திரன்

திருச்செங்கோடு பகுதியைச்சேர்ந்த திரு. கே.எம்.சந்திரன் - திருமதி கே.பாமா தம்பதியரின் இளைய மகள், சேரன்குலச்செல்வி ரோமா. தனது 7வது வயது முதல் டென்னிஸ் விளையாடிவரும் செல்வி ரோமா, மாநில அளவிலும், தேசிய அளவிலும் பல பரிசுகளை வென்றுள்ளார்.

2008ம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளில் ஒற்றையர், மற்றும் இரட்டையர் பிரிவில் விளையாடி இரண்டு போட்டிகளிலும் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் புனே நகரில் நடைபெற்ற 14 வயதுக்கு உட்பட்டவர்களுக்கிடையேயான ஆசிய அளவிளான டென்னிஸ் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.

**தரவரிசைப்பட்டியல்** :-

| | | |
|---|---|---|
| ஆசிய அளவில் | 14 வயதுக்கு உட்பட்டவர்களில் | 22ம் இடம் |
| தேசிய அளவில் | 12 வயதுக்கு உட்பட்டவர்களில் | முதல் இடம் |
| தேசிய அளவில் | 14 வயதுக்கு உட்பட்டவர்களில் | 13வது இடம் |

அவரது சாதனையைப் பாராட்டி, உலகளவில் நடைபெறும் போட்டிகளில் வென்று தமிழகத்திற்கும் கொங்கு சமுதாயத்திற்கும் பெருமை சேர்க்க வாழ்த்தி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு இளம் சாதனையாளர்” விருது வழங்கியது.

❖❖❖❖❖

# ஆசையைப் பற்றிய தெளிவு

ஆசை.. இது இல்லாதவர்கள் யார் என்று கேட்பார்கள். உண்மைதான்.. ஆசைப்படுவது மனித இயல்புதான்.. அதில் தவறில்லை. ஆனால் ஆசையைப்பற்றி விரிவாகச் சிந்தித்தால் அதைப்பற்றிய தெளிவு நம்மை அதன் தீமைகளில் இருந்து காப்பாற்றும்.

ஆசைதான் துன்பத்திற்குக் காரணம் என்று கண்டறிந்தார் புத்தர். ஆசைக்கோர் அளவில்லை என்றார் தாயுமானவர். திருமூலர் இன்னும் ஒருபடி மேலே போய் ''ஈசனோடாயினும் ஆசை அறுமின்''.. என்கிறார்.

ஆசை என்பது சிறுவயது முதற்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக வளர்கிறது. மனிதன் வளர வளர விதம்விதமாய் ஆசைகள் வளர்கின்றன. சில ஆசைகள் இயற்கையானவை. சில ஆசைகள் ரசனை உணர்வால் தோன்றுபவை. சில ஆசைகள் தனிப்பட்டவை. அவற்றைப் பொதுமைப்படுத்த முடியாது. ஆசைகளால் அல்லல்படுபவர்கள் அதிகம். சில ஆசைகள் நிறைவேற சில தியாகங்களைச் செய்யவேண்டும்.

ஆசைகள் ஆரம்பத்தில் ஓர் எண்ணமாய்த் தோன்றும். அவற்றை ஆராயாமல் உணர்ச்சி வசப்படுவதன் காரணமாய் படிப்படியாக மனத்தில் இடம் பிடித்துக்கொள்ளும். மனிதனை அடிமைப்படுத்தும் ; ஏக்கத்தை வளர்க்கும்; அமைதியைக்கெடுக்கும்; தவறு செய்யக் கூடத் தூண்டும்.ஆசையின் இயல்பு என்னவெனில் ஓர் ஆசை நிறைவேறியதும் இன்னோர் ஆசையைக்கொண்டு வந்து நிறுத்தும். நிற்பது என்பதும் முடிவு என்பதும் இல்லாதது ஆசை.

சிலபேர் எதைப் பார்த்தாலும் அது தங்களிடம் இருக்கவேண்டும் என்று நினைப்பார்கள். அழகான ஒன்றை ரசிக்கும்போது அந்தப் பொருளுக்கும் நமக்கும் இடையே நாகரிகமான தூரம் இருக்கிறது. ஆசை என்ற பெயரில் அதன் உரிமையாளனாய் இருக்கவேண்டும் என்று நினைக்கும் போது அந்தத் தூரத்தின் நாகரிகம் போய் விடுகிறது.

தர்மத்துக்கு விரோதமான ஆசைகள் சில உண்டு. மனிதன் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியது இது போன்ற ஆசைகளிடத்தில்தான். ஆசைகளுக்கு எல்லை வகுத்துக்கொள்ள வேண்டியது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் அவை தர்மத்தின் எல்லைக்குள் இருக்க வேண்டும் என்பது.

பலபேருக்குத் தேவைகளும், ஆசைகளும் என்ன என்பது புரிவதில்லை. தேவைகள் ஆசையாக மாறலாம், ஆனால் ஆசைகள் தேவைகளாக மாறக் கூடாது. அப்போது தான் ஆசைகளின் பாதிப்பு ஏற்படுகிறது. தேவைகள் ஒவ்வொருவருக்கும் மாறுபடும்.

மற்றவர்கள் ஒன்றை வைத்திருக்கிறார்களே என்று நினைத்து நாமும் அதேபோல் வைத்திருக்க வேண்டும் என்று எண்ணுவது ஒருவிதமான தொற்று ஆசையாகும்.

சரி.... ஆசைகளே இருக்கக் கூடாதா? ஆசைகள் விஷயத்தில் கொள்கை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

ஆசைகளைத் தராசில் நிறுத்துப் பார்த்துதான் மனத்தில் அனுமதிக்க வேண்டும். மன அடக்கம் இதற்குத் தேவை. அவரவர்களின் நிலைக்கேற்ப சூழ்நிலைக்குத் தக்கவாறு தர்மத்தை மீறாத வகையில் ஆசைகள் அமைய வேண்டும். ஆசைகள் அதிகரிக்கும் அளவுக்குப் பிரச்சினைகளும் அதிகரிக்கும்.

இன்னும் ஒரு முக்கியமான விஷயம்.. நிறைவேறிய ஆசைகளில் மன நிறைவைக்கொள்ள வேண்டும். நிறைவேறாத ஆசையையே மனத்தில் நினைத்துக்கொண்டு வருந்தக்கூடாது. நிறைவேறிய வரையில் கிடைக்கும் மகிழ்ச்சிதான் உற்சாகம் தருகிறது. அந்த உற்சாகத்தை நிறைவேறாத ஆசையைப்பற்றிய நினைவால் கெடுத்துக்கொள்ளக்கூடாது.

ஆசைகளைப் பற்றிய ஓர் உண்மை என்னவென்றால் அதுவும் மாறும் இயல்புடையது. அதன் மறுபக்கத்தில் துன்பம் உள்ளது. அது ஒரு விலங்கைப் போன்றது. அனுபவ முதிர்ச்சியினால்தான் ஆசையைப் பற்றிய தெளிவு பெருகும். ஆசைப்படும் பொருள் எல்லாம் நன்மையைச் செய்யும் - இன்பம் தரும் என்று சொல்ல முடியாது.

அதே சமயத்தில் சில ஆசைகள் பாராட்டைப் பெறுவதோடு மற்றவர்க்கு நன்மையும் செய்கின்றன. ரசனையால் ஏற்படும் ஆசைகள் என்று சில உள்ளன. ஒரு படைப்பாளி, கலைஞன், சிந்தனையாளன் - என்ற இவர்கள் எல்லாம் தங்கள் ரசனையால் சிலவற்றை உலகுக்கு அளிக்கிறார்கள். அவற்றினால் அவர்கள் நன்மையும் மகிழ்ச்சியும் அடைவதோடு, அந்தப் படைப்புகளை ரசிப்பவர்களுக்கும் மகிழ்ச்சியைத் தருகிறார்கள். இசை, கவிதை, ஓவியம்,இலக்கியம், பிற படைப்புகள் எல்லாம் அந்தப் படைப்பாளிகள்ஆசையாய்த் தந்தவை. கல்வியிலும் அறிவிலும் ஆசை வைத்தால், அறிவாளிகள் உருவாகி சமூகத்துக்கும் நன்மை செய்கிறார்கள்.

ஆசைகளை மனிதன் எப்படிக் கையாள்கிறான் என்பதில்தான் அவன் புத்திசாலித்தனம் இருக்கிறது. தன்னல ஆசைகளை விடப் பொதுநல ஆசைகள் உயர்ந்தவை.

ஆசைகள் அளவுக்கு மீறிப்போகும் போது - அல்லது வெறியாக மாறும்போது நம்மை ஏதாவது ஒரு விதத்தில் பாதிக்கின்றன. எனவே மனத்தைச் சமநிலைக்குக் கொண்டுவருவது நல்லது.

(திரு.வி.எஸ்.ஸ்ரீதரன் அவர்களின் கட்டுரையிலிருந்து)

❖❖❖❖


# அதனதன் காலம்

- கவிஞர் மனோன்மணி மாணிக்கவாசகம்

மஞ்சு துயிலும்
மலைத் தொடர் மடியினில்
அரண்போல், ஆழ்ந்த
அகழி போல
நுரை ததும்ப ஓடுகின்ற
வாய்க்காலைப் பார்த்து
இருகரை தொட்டு ஓடும் ஆறு
என்ன சேதியென்று கேட்கும்.
வாய்க்கால் மீதமைந்த
வெறும் ஒற்றைக்கல் பாலத்தின்
காலடியில் ஓடும் நீர்
காணரிய பூக்கள் சுமந்து
ஊர்வலமாய் நகர்ந்து
உல்லாசமாய் வலம் வருமாம்.
நெல்வயலில் புல்வரப்பில்
நெடுகப் பயிர்ப்பார்க்க
நடந்திருக்கும் பாதங்களை
நெற்பயிர்கள் வந்துவந்து முத்தமிடும்.
நெல்லுக்கு வேலியாய்
நெடுங்கரும்பு காத்து நிற்க
வண்ணமலர் கூட்டம்
வானவில் தோரணமாம்
மேவிய புல்வெளியில்
மடிசுரந்த பசுக்கூட்டம்
ஆட்டுமந்தையுடன்
அருகிருந்து புல்மேயும்.
நிழல்காணின் களைத்து
நீள்துயிலோடு அசைபோடும்
குடியிருக்கும் மக்களுடன்
குடிதண்ணீர் கிணற்றருகே
பணியாளர் மனைகள்
பெருமிதமாய் அணிவகுக்கும்.
அருகிருக்கும் படர்ந்த
அரசமர நிழல் அவர்க்கு
கூடிப்பேசி மகிழ்ந்து
களித்திருக்கும் சமுதாயக்கூடமாம்
தாயம் விளையாடுவார் அங்கு
திளைத்து ஆடுபுலி ஆடுவார் தம்
பண்ணாடிகள் நிறைகுறை பேசுவார்.
குழந்தைகள் உடனங்கு
குதித்தாடி மகிழ்வார்.
அன்னையர் சிலர் அன்போடு
அருமைப் பாலகருக்கு
பாலூட்டுவதும் மிரட்டி
சோறூட்டுவதும் உண்டு.
சித்திரை மாதத்து
சிறுபொழுதில் நிலவொளியில்
கயிற்றுக் கட்டில்களை
கவித்துப்போட்டதன் மேல்
குடும்பத்து மக்கள்
கூடி அமர்ந்து
தட்டில் சோறும் கறியும்
தம்மிடையே பரிமாறி
மகிழ்ந்து சிரித்திருப்பார்.
விளைந்த நெல் விளைச்சலுக்கும்
வாழைத் தார்களுக்கும்
விலைகேட்டு அங்கு
வந்து குவிவார் வியாபாரிகள்.
குவியலாகவும் நெல்மணிகள்
கோணிப்பை அடுக்குகளாகவும்
ஊரே நெல்மனம்
உவப்பாகப் பறந்து வீசும்
வாழைத்தார்கள்
வகை வகையாய்
சிவப்பும் பச்சையுமாய்

சீராக நின்றிருக்கும்.
பூமிக்கடியில் பத்திரமாய்
புதைத்து வைத்திருக்கும்
மஞ்சள் கிழங்குகளுக்கு
மாறி மாறிப் பேரம்பேசி
வந்து நிற்கும் ஜவேஜி
வியாபாரிகள் நடைபயில்வார்.
சலங்கைகள் அணிந்த
சிவலை மாடுகள்
வில் வண்டியில் பூட்டி
வைக்கோல் பரப்பி மெத்தையிட்டு
விரிப்புகள் விரித்து
வண்டியோட்டி சாட்டைவாருடன்
வண்ணமாய் உருமாலொடு
காத்திருப்பார் கவுண்டர்
கவுண்டச்சி வரவினுக்கு.
நெகமம் புடவை
நேர்த்தியாய் உடுத்தி
எண்ணெயிட்டுத் தலைவாரி
இழைய நீவி கொண்டையிட்டு
வில்போல பூச்செண்டு
வளைவாக அதில்சூடி அம்மாவும்
கனகம்பீரமாக ஐயாவும்
சேர்ந்து வண்டியேற
சூழ்ந்து நின்று பணியாட்கள்
புன்னகையிடன் அனுப்பிவைப்பார்-அவர்
போனவுடன் வருகின்ற தமது
ஓய்வு ஆசையுடன் நினைத்தபடி.
பக்கத்து ஊர் திருமணத்திற்குப்
போவார். கோவிலுக்குப் போவார்.
சந்தைக்குத் தேவைப்பட்டால்
சிலநேரம் போவாராம்.
கூடை வழிய வழிய
காய் பழம்பொருட்களுடன்
சொன்ன நேரத்தில்
சொன்னபடி வீடுதிரும்புவார்.
அவர் புறப்பட்டுப் போவதும்
அம்சமாய் வீடு திரும்புவதும்
கண் நிறைந்த காட்சியாகும்.
கனவாகிப் போனதுதான்.
எழிலார் நடைமுறை
எங்கு மறைந்தேகியதோ?
பிரித்தெடுத்து மீண்டும்
பார்த்திடக் கூடுதில்லை
பாட்டியும் பாட்டன்மாரும்
பேரக்குழந்தைகளுக்குக்
கணிவாக எடுத்துச் சொல்லின்
கேட்டு மகிழ்வர் மக்கள்.
அதனதன் காலம் யாண்டும்
அதனதன் கையில்
தென்கையிலோ இருக்கும் காலத்தினை
எண்ணிப் பார்ப்பதொன்றே
இன்றைய நிலையாம்.

❖❖❖❖



# புதிய தோள்பட்டைமூட்டு ஆர்த்ராஸ்கோப்பி (Key Hole) அறுவை சிகிச்சையை இந்தியாவிலேயே முதன் முறையாக நிகழ்த்தி சாதனை

Dr.சி.லெனின் சென்னை அப்போல்லோ மருத்துவமனையில் முழங்கால் மூட்டுமாற்றுஅறுவைசிக்சை மற்றும் ஆர்த்ராஸ்கோப்பி நிபுணராகப் பணியாற்றிவருகிறார். இவர் தனது குழுவுடன் ஆர்த்ராஸ்கோப்பிக் பிரேக்கியல் பிளக்கஸ் கதீடரைசேகன் என்ற புதுமையான தோள்பட்டை மூட்டு ஆர்த்ராஸ்கோப்பி அறுவை சிகிச்சையை இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை அப்போலோ மருத்துவமனையில் நிகழ்த்தி சாதனை புரிந்து உள்ளார். இதனால் தோள்பட்டை அறுவை சிகிச்சைக்குப் பிறகு வலியில்லாமல் நோயாளிகள் குணமடையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக, மயக்க மருந்து நிபுணர்கள், ஊசிமூலம் கழுத்திலிருந்து தோள்பட்டைக்குச் செல்லும் நரம்புகளை செயலிழக்கச் செய்து தோள்பட்டை அறுவை சிகிச்சைக்குப் பிறகு வலியிலிருந்து நிவாரணம் அளித்து வந்தனர். ஆனால் இத்தகைய முறையில் ஏதாவது சிலசமயங்களில் ஆபத்தான சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பிருந்தது. (மூச்சு விடுவதில் சிரமம், பேச்சு குழருதல் மற்றும் பல). ஆனால் இந்த முறையில் இந்த நரம்புகளை ஆர்த்ராஸ்கோப்பி கொண்டு நேரில் பார்த்து, அதனருகே ஒரு கத்தீடர் குழாய் பொருத்தப்பட்டு மருந்து செலுத்தப்படுகிறது. இதனால் தோள்பட்டையில் தசைகிழிவதால் ஏற்படும்வலி, தோள்பட்டை மூட்டு அடிக்கடி நழுவுவதால் ஏற்படும் தொந்தரவு, சர்க்கரை வியாதியால் தோள்பட்டை பிடிப்பு மற்றும் தோள்பட்டைவலி இவற்றால் அவதிபடும் நோயாளிகளுக்கு ஆர்த்ராஸ்கோப்பி மூலம் மூட்டினைத் திறக்காமல் எளிதாகவும், வெற்றிகரமாகவும் சிகிச்சை அளிக்கப்பட்டு, அதன் பிறகு அறுவை சிகிச்சையால் ஏற்படும் வலியை அறவே உணராமல் செய்ய இயலும். இந்த அறுவை சிகிச்சையினால் எந்தப் பக்கவிளைவும் அறவே கிடையாது. மேலும் முழங்கால் மூட்டில் ஏற்படும் சவ்வுகிழிதல், விகமென்ட் கிழிதல், குறுத்தெலும்பு பாதிப்பு (Cartilage injury) இவற்றிக்கும் மூட்டினைத் திறக்காமல் ஆர்த்ராஸ்கோப்பி மூலம் இவர் சிகிச்சை அளித்து வருகிறார்.

அதுமட்டுமல்லாமல், Minimally invasive Computer mavigated Giflex total knee replacement அதாவது குறைந்த அளவே மூட்டை திறந்து (8.10 cm) தசைகளுக்குப் பாதிப்பில்லாமல் முழு அசைவையும் கொடுக்கக்கூடிய கணிப்பொறி கொண்டு செய்யப்படும். முழங்கால் மூட்டுமாற்று அறுவைசிகிச்சையிலும் இவர் சிறந்தவராவார். இவ்வாறு செய்யப்பட்ட செயற்கை மூட்டுகள் வெகுநாள் உழைப்பதோடு, நோயாளிகள் தரையில் எளிதாக அமரவும் வகைசெய்கிறது.

மருத்துவத்துறையில் சாதனை புரிந்துவரும் டாக்டர் சி.லெனின் அவர்களுக்கு சங்கம் பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறது.

(தொடர்புக்கு : Dr.C.லெலின், போன் : 28233333, 28290200)

❖❖❖❖

# ஐக்கிய நாடுகள் சபை

உலக மனங்களின் ஒற்றுமைக்கும், நம்பிக்கைக்குமுரிய ஓர் அடையாளமே ஐக்கிய நாடுகள் சபை (United Nations) உலக சமாதானம், பாதுகாப்பு மற்றும் அரசியல் பொருளாதார, சமூக நிலையில் ஒத்துழைப்பு இவற்றிக்காக உலக நாடுகள் தமக்குள் ஏற்படுத்திக்கொண்ட அமைப்பான ஐக்கிய நாடுகள் சபை, 1945 அக்டோபர் 24 முதல் செயல்படத் துவங்கியது.

ஐக்கிய நாடுகள் சபை என்னும் பெயர் அமெரிக்க அதிபர் பிராங்களின் டி.ரூஸ்வெஸ்ட்டின் சிந்தனையில் உருவானது. ஐ.நா.தனது 18 சுதந்திர சிறப்புக் கழகங்கள் 14 பெரிய திட்டங்கள் மற்றும் நிதியமைப்பு வழி மனிதகுலத்தின் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டுவருகிறது. ஆண்டுதோறும் அக்டோபர் 24 ஐ.நா. தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஐ.நா. சபையின் அலுவலக மொழிகள், சீனம், அரபி, ஆங்கிலம், பிரெஞ்சு, ருஷ்யன் மற்றும் ஸ்பானிஷ். இதன் சின்னம் இளம் நீலத்தின் நடுவே அமைந்த வெள்ளை வட்டமாகும். அமைதியை விரும்பும் எந்த நாடும் இதன் உறுப்பினராக முடியும். பாதுகாப்பு சபையின் சிபாரிசின்படி, பொதுக்குழு புதிய உறுப்பினர்களை அனுமதிக்கிறது. தற்போதைய நிலையில் ஐ.நா.உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 192. தானே தபால் தலைகள் வெளியிடும் தபால் நிலையம் ஐ.நா.விற்குண்டு.

**தலைமையகம்** : நியூயார்க், முகவரி : First Avenue, UN Plaza, New York City,New yorkm, USA

ஐ,நா.சபை ஐந்து உள்ளமைப்புகளைக் கொண்டது. அவை, பொதுச்சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார சமூகச்சபை, பொறுப்பாண்மைக் குழு, பன்னாட்டு நீதி மன்றம் மற்றும் செயலகம் என்பன.

**பொதுச்சபை** : (General Assembly)

ஐ.நா. உறுப்பு நாடுகள்அனைத்தின் பிரதிநிதிகளையும் கொண்டது. உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் தலா ஐந்து பிரதிநிதிகளை இச்சபைக்கு அனுப்பி வருகின்றன. என்றாலும் ஒரு வாக்குரிமையே உண்டு. முக்கிய பிரச்சனைகளில் தீர்மானம் நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். இச்சபை குறைந்தது வருடத்திற்கு ஒருமுறை கூடும். ஐ.நாவின் ஆண்டு வரவு செலவு திட்டத்தைக் கணக்கிடுவது, பாதுகாப்பு சபையின் தற்காலிக உறுப்பினர்களையும், பொருளாதார, சமூக வகை மற்றும் தர்மகர்த்தாகுழு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுப்பது, பாதுகாப்புச் சபையோடு சேர்ந்து பன்னாட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பது போன்றவை இதன் பணிகளில் சில.

**பாதுகாப்புச்சபை** : (Security Council)

இது 15 அங்கத்தினர்களைக் கொண்டது. ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு உண்டு. ஐந்து நிரந்தர உறுப்பினர்களும், இரண்டு ஆண்டுகளுக்கான பத்து தற்காலிக உறுப்பினர்களும் அடங்கியது. ஐந்து நிரந்தர உறுப்பினர்கள் எந்தத் தீர்மானத்தையும் நிராகரிக்கும் அதிகாரத்தைப் (Veto Power) பெற்றுள்ளனர்.

**நிரந்தர உறுப்பினர்** : சீனா, பிரான்ஸ், ருஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா

**தற்காலிக உறுப்பினர்** : பெல்ஜியம், இந்தோனேஷியா, இத்தாலி, பனாமா, தென்னாப்பிரிக்கா, (டிசம்பர் 31, 2008 வரை) வியட்நாம் கோஸ்டாரீகா, குரோஷியா, லிபியா, புர்கிளோ ஃபாஸோ (டிசம்பர் 31, 2009 வரை)

உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை உயர்ந்து வருவதையடுத்து பாதுகாப்புச் சபையை விரிவு படுத்த வேண்டும் என்றும், இந்தியா, ஜெர்மனி, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளை நிரந்தர உறுப்பினர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் கோரிக்கை பல தளங்களிலும் வலுத்து வருகிறது.

**பொருளாதார சமூகச்சபை** : (Economic & Social Council)

பொதுச்சபையின் பொறுப்பின்கீழ் இயங்கிவரும் இச்சபை, ஐ.நா. சபையின் பன்னாட்டு பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம், கல்வி, சுகாதாரம், இவற்றோடு தொடர்புடைய பணிகளைச் செய்கின்றது. உறுப்பு நாடுகள் 54. இவர்கள் பொதுச்சபையால் மூன்றில் இரண்டு பங்கு வாக்கு பெரும்பான்மையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பதவிக்காலம் மூன்றாண்டுகள்.

**பொறுப்பாண்மைக் குழு** : Trusteeship Council)

சுய ஆட்சி அதிகாரம் பெறாத நாடுகளின் நலனைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட இக்குழுவில் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்களான சீனா, பிரான்ஸ், ருஷ்யா, உறுப்பினர்களை சீனா, பிரான்ஸ், ருஷ்யா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா எனும் ஐந்து நாடுகள் உறுப்பினராக உள்ளன. இதன் தலைமைப் பதவி ஒவ்வொரு வருடமும் மாறிக் கொண்டேயிருக்கும்.

**பன்னாட்டு நீதிமன்றம்** : (International Court of Justice)

எல்லா ஐ.நா. உறுப்பு நாடுகளும் இந்நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டவை. 15 நீதிபதிகள் உள்ளனர். ஆங்கிலமும், பிரெஞ்சும் அலுவல் மொழிகள். இந்நீதிமன்றத்தின் கூட்டம் திஹேக்கில் (நெகர்லாந்து) நடைபெறும். ஆனால் வேறு எங்காவது கூடுவது நல்லதென கருதினால் அங்கேயும் செயல்படலாம்.

**அறிந்து கொள்வோம் ஐ.நா.வை**

- ஐ.நா. பொதுச்செயலரான முதல் ஆசிரியர் : யு.தாண்ட (மியான்மார்)
- ஐ.நா. பொதுச்செயலர் பதவி வகித்தபின் ஒரு நாட்டின் அதிபரானவர், குர்ட்வான் ஹைம் பெரிஸ் (ஆஸ்திரியா)

- ஐ.நா. பொதுச்செயலராக பதவி வகித்தபின் ஒரு நாட்டின் பிரதமரானவர், ஜாவியர் பெரஸ் டி.கொயர் (பெரு)
- ஐ.நா. நோபல் பரிசு பெற்ற ஐ.நா. பொதுச்செயலர்கள், டாக் ஹாமர் ஸ்கோல்ட் (1961) கோஃபி அனான் (2001)
- ஐ.நா. பொதுச்செயலரான முதல் ஐரோப்பியர், டிரைக் வே லை (நார்வே)
- ஐ.நா.பொதுச்செயலரான முதல் ஆப்பிரிக்கர் ; பொட்ரோஸ் பொட்ரோஸ் காலி (எகிப்து)
- பொதுச்செயலராக பதவியிலிருந்த போதே காலமான ஒரே பொதுச்செயலர் : டாக் ஹாமர் ஸ்கோல்ட் (சுவீடன்)
- ஐ.நா. பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம் : டோக்கியோ (ஜப்பான்)
- நியூயார்க்கிலுள்ள ஐ.நா.நூலகத்தின் பெயர் : டாக் ஹாமர் ஸ்கோல்டு
- மிக இறுதியில் சுதந்திரம் பெற்ற ஐ.நா. டிரஸ்டிஷிப் : பலாவ் (1994)
- நியூயார்க்கிற்கு வெளியே தலைமையகம் கொண்ட ஒரேயொரு ஐ.நா. அமைப்பு : சர்வதேச நீதி மன்றம்
- ஐ.நா.விலிருந்து வெளியேற்றப்பட்ட முதல் நாடு : தைவான் (1971)
- அறிவியல் வளர்ச்சிக்காக ஒரிசா அரசுடன் இணைந்து யுனெஸ்கோ ஏற்படுத்திய விருது : கலிங்கா விருது

**ஐ.நா.வின் இந்தியா**

- ஐ.நா. வில் இந்தியா உறுப்பினரான நாள் 1945 அக்டோபர் 30
- இந்தியாவுக்காக ஐ.நா. சார்ட்டரிஸ் கையெழுத்திட்டவர் சர். இராமசாமி முதலியார்
- உலக சுகாதார அமைப்பின் தலைவரான ஒரே இந்தியப் பெண்மணி ராஜ்குமாரி அம்ருத் கௌர்
- எட்டு மணி நேரம் தொடர்ச்சியாக ஐ.நாவில் உரையாற்றியவர் வி.கே.கிருஷ்ணமேனன் (1957)
- ஐ.நா.மனித உரிமைக்கழகத்தின் துணை இயக்குணராக பதவி வகித்தவர் ஜஸ்டிவ் பி.என்.பகவதி
- ஐ.நா.அண்டர் செகரெட்டரியாக நியமிக்கப்பட்ட முதல் இந்தியர் சசிதரூர்
- இன்டர் பார்லிமென்டரி யூனியனின் ஆயுட்கால தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டஇந்தியப்பெண்மணி - நஜ்மா ஹெப்துல்லா
- ஐ.நா.வில் முதன் முதலாக இந்தியில் உரையாற்றியவர் எ.பி.வாஜ்பாய்
- உலக சுகாதாரக் கழகத்தின் ஆடிட்டராக தேர்வு செய்யப்பட்ட முதல் இந்தியர் விஜயேந்திரா என்.கவுர்
- ஐ.நா.வில் பாட அனுமதி பெற்ற முதல் பாடகி எம்.எஸ்.சுப்புலெட்சுமி (1966)

❖❖❖❖

# தேசிய சின்னங்கள்

இந்தியாவின் தேசியச் சின்னம் சாரநாத்தின் உள்ள அசோகர் ஸ்தாபியில் இருந்து எடுக்கப்பட்ட அசோகர் சக்கரமாகும். அதில் இருக்கும் நான்கு சிங்கங்களில் ஒன்று மறுபுறத்தில் இருப்பதால் நம்மால் பார்க்க முடிவதில்லை. அவற்றின் கீழே ஒரு தேர்ச்சக்கரமும், இடையே சீறிப்பாயும் குதிரைகளும், காளைகளும் பொறிக்கப்பட்டுள்ளன. பீடத்தின் கீழே முண்டக உபநிடதத்திலிருந்து எடுக்கப்பட்ட வாய்மையே வெல்லும் என்னும் பொருள் கொண்ட 'சத்ய மேவஜயதே' என்ற வார்த்தைகள் தேவனாகிரி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசியச் சின்னத்தை, இந்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கங்களின் அலுவலக நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். இந்திய ஜனாதிபதி, மத்திய அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள், வெளிநாடுகளிலுள்ள இந்திய தூதரங்கள், மாநில ஆளுநர்கள் மற்றும் தலைமை அதிகாரிகள், மாநில அமைச்சர்கள் மற்றும் இலாகாக்களின் ஒரே அதிகார பூர்வ முத்திரை இதுவே.

தேசியச்சின்னம், அமைச்சர்கள் பயன்படுத்தும் எழுதுதாள்களில் (Letter Head) நீல வண்ணத்திலும், அதிகாரிகள் பயன்படுத்தும் எழுது தாள்களில் சிகப்பு வண்ணத்திலும் அச்சிடப்பட வேண்டும். சில குறிப்பிட்ட அதிகாரிகள், வெளிநாட்டு அரசுடனான தொடர்புக்கு நீல வண்ண தேசியச்சின்னம் அச்சிடப்பட்ட எழுதுதாள்களைப் பயன்படுத்தலாம். மக்களவை உறுப்பினர்கள் பச்சை வண்ணத்திலும், மாநிலங்களவை உறுப்பினர்கள் சிவப்பு வண்ணத்திலும் தேசியச் சின்னத்தைப் பயன்படுத்த வேண்டும்.

**தேசியக்கொடி**

கடும் காவி, கடும் பச்சை, மத்தியில் தூய வெண்மை ஆகிய மூன்று நிறங்களும், வரையறுக்கப்பட்ட நீள அகலங்களும் கொண்ட மூவர்ணக்கொடியே இந்தியாவின் தேசியக் கொடி. வெண்பட்டையின் நடுவே ஓர் அசோகச் சக்கரமும் (கடல் நீல வண்ணம் கொண்டது), அதைச் சுமர்ந்து 24 அரும்புக் கால்களும் உள்ளன. காவி நிறம் தைரியம் மற்றும் தியாகத்தையும்,வெண்மைநிறம் உண்மை மற்றும் அமைதியையும், பச்சை நிறம் அமைதியையும், வீரத்தையும் குறிப்பதாக கற்பிக்கப்பட்டது. மூவர்ணக் கொடியை அரசியல் நிர்ணய சபை 1947 ஜூலை 22 இல் ஒருமித்தக் கருத்துடன் அங்கீகரித்தது.

**தேசிய கீதம்**

. இந்திய அரசியலமைப்புக் குழு 1950 ஜனவரி 24 ல் ஜன கண மன.. பாடலை நாட்டின் தேசிய கீதமாக அங்கீகரித்தது.

- 1911, டிசம்பர் 27 ஆம் தேதி கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மகாநாட்டில்தான் இது முதன் முதலாகப் பாடப்பட்டது.
- 1912 இல் தாகூரின் தத்துவபோதினி பத்திரிக்கையில் பாரத விதாதா என்னும் தலைப்பில் கீழ் இது வெளியிடப்பட்டது.
- முழுப்பாடல் மொத்தம் ஐந்து செய்யுள் கொண்டது. எனினும் முதல்செய்யும் மட்டுமே தேசிய கீதமாகப் பாடப்பட்டு வருகிறது.
- 1919 இல் The Morning Song of India எனும் தலைப்பில் தாகூரே இதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
- தாகூரின் இந்த மொழிபெயர்ப்பு கையெழுத்துப் பிரதி 1936 இல் மதனப்பள்ளி கல்லூரி மலரின் (அன்றைய மெட்ராஸ்) வெளியானது.
- இந்தப் பாடலை ஏறக்குறைய 52 விநாடிகளில் பாடி முடிக்க வேண்டும்.

ஜனகண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சபா ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமோ ஜாகே
காஹே தவ ஜய காதா
ஜக கண மங்கள தாயக ஜய்ஹே
பாரத க்ாய் விதாதா
ஜயஹே ! ஜயஹே ! ஜயஹே !
ஜய ஜய ஜய ஜய ஹே!

**இந்தியாவின் புதிய பூபாளப் பாடல் எனும் பாடலின் சாரம் வருமாறு** :

இந்தியத்தாயே ! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கிற நீயே எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செய்கின்றாய். நின் திருப்பெயர் பஞ்சாப்பையும், சிந்துவையும், குஜராத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது. நின் திருப்பெயர் விந்திய, இமயமலை தொடர்களில் எதிரொலிக்கிறது. யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகின்றன. இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

**தேசியப் பாடல்**

'ஜன கண மன' தேசிய கீதத்தைவிடவும் வந்தேமாதரம் தேசியப் பாடல் பழமையானது. 1882 இல் பங்கிம் சந்திரனின் ஆனந்த் மட் நூல் வெளியானது. எனவே இதற்கும் முன்பே இது எழுதப்பட்டிருக்க வேண்டும்.

. 1986 இல் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் மாகாநட்டில் தான் இது முதன் முதலாகப் பாடப்பட்டது.

. இதற்கு இசையமைத்தவர் இரவீந்திரநாத் தாகூர்.

வந்தேமாதரம்
சுஜலாம் சுபலாம் மலயஜ சீதளாம்
சஸ்ய சியாமளாம், மாதரம் !
கப்ரஜோத்சனா புளகீத யாமி னீம்
பல்லகுசுமித துருமதள சோபினீம்
சுகாசினீம் சுமதுர பாஷிணீம்
சுகதாம் வரதாம், மாதரம் !

தேசியப்பாடலின் ஸ்ரீ அரவிந்தரின் ஆங்கில மொழிபெயர்ப்பின் தமிழ்ப் பொருள் : "அம்மா நான் வணங்குகிறேன். இனிய நீர்ப் பெருக்கினை, இன்கனி வளத்தினை, தனி நறுமலயத் தண்காற்சிறப்பினை, பைந்நிறப் படினம் பரவிய வடிவினை வணங்குகிறேன். வெண்ணிலாக் கதிர் மகிழ் விரித்திடும் இரவின் மலர் மணிப் பூந்திகழ் மரன் பல செறிந்தனை, குறுநகையின் செலார் குலவிய மாண்பினை, நல்குவை இன்பம், வரம் பல நல்குவை, அம்மா வணங்குகிறேன்.

| | |
|---|---|
| தேசிய விலங்கு | புலி |
| தேசியப் பறவை | மயில் |
| தேசிய மலர் | தாமரை |
| தேசிய மரம் | ஆலமரம் |
| தேசியக் கனி | மாம்பழம் |
| தேசிய விளையாட்டு | ஹாக்கி |

❖❖❖❖

# நினைவலைகள்

கவிஞர் இலட்சுமி வாசுதேவன்

## அன்னை

அன்பாலே தன்னுள் எனை ஐயிரண்டு
திங்கள் சிறைவைத்து அங்கமெல்லாம்
நோகப் பெற்றவளை என் அன்னையை
எங்கேயும் நான் தேடவில்லை ஏனெனில் அவள்
என்னுள்ளே எழில்மயிலாய் இருக்கின்றாள்
ஈ எறும்பு மோதாது தன் இமை மூடாதெனைக்
காத்து வளர்த்திட்ட என் அன்னைக்குக் கைமாறென்ன செய்திடுவேன்
உறங்கையிலும் தான் விழித்திருந்து என் நலங்காத்திட்ட
உத்தமியை என் நெஞ்சத்துக் கோவிலில் தெய்வமாக்கினேன்
இறைவனின் பிரதிநிதியாம் என் தாயை என் இதயக் கோவிலில்
வைத்துப் பூசிக்க என்ன தவம் செய்திட்டேன் !
அன்பெனும் நன்னீரால் குளிப்பாட்டி அவள் நெஞ்சத்தை
மஞ்சமாக்கி ஆசைக்கயிற்றால் தொட்டில் கட்டி
தண்தமிழால் தாலாட்டி, பட்டால் எனை அலங்கரித்து
தன் குருதியைப் பாலாக்கி எனைக் குறைவின்றி
வளர்ந்திட்ட அன்னைக்கு எது ஈடு இணை?
ஒப்பாரும் மிக்காருமில்லா என் தாயை என் உள்ளத்தின்
ஒளி விளக்கை எப்போதும் அணையாது காத்திடவே
அந்த ஓங்கார சுந்தரியின் தாளைச் சரணடைந்தேன்!
காப்பாள் அவளென்று கண்டிப்பாய் நம்பியிருக்கின்றேன்.

## தந்தை

துன்பம் வந்துவிடின் துடிக்கையிலே அம்மா
என்றே சொல்வோம் என்பர் ஆனால் நான்
அப்பா என்றே அறியாது கூறிடுவேன் உண்மை!
அன்னைக்கு மேலாய் அரவணைத்து மனதில் எண்ணியபோதே
எண்ணியவை செய்து எம்மனதில் இடம்பிடித்திட்ட
எந்தைக்கு ஏது ஈடு இணை?
பாசத்திற்குப் பொருள் சொல்லிப் பிரிவின் உருவாய்
திகழ்ந்தவரின் அன்புருவம் என் முன்னம் எப்போதும்!
அன்பு அறம் இவையிரண்டை தாரகமந்திரமாக்கி
ஆண்டாண்டாய் எனை வளர்த்திட்ட எம் தந்தை
மறையவில்லை மனதிலே அழியாத உயிர் ஓவியமாய்
நான் உள்ளவரை திகழ்ந்திடுவார் திண்ணம்.

❖❖❖❖

# மங்கல வாழ்த்து

## கொங்கு வேளாளர் சீர்களும், இலக்கியங்களும்

- கொங்குமாமணி புலவர் செ.இராசு

### திருமணத்தில் வாழ்த்துதல்

திருமணம் செய்து கொள்ளும் மணமக்களை வாழ்த்துதல் என்பது உலகமெங்கும் எல்லா மக்களிடையே உள்ள மரபாகும். அவையில் உள்ள அனைவரும் நல்ல உள்ளத்தோடு மகிழ்வாய் வாழ்க என வாழ்த்தும்போது இயல்பாகவே அதற்கொரு சக்தி அமைவது இயற்கை.

சங்க இலக்கியங்களிலும் மணமக்களை வாழ்த்திய நிகழ்ச்சியைக் காணுகின்றோம்.

'வாலிழை மகளிர் நால்வர் கூடி
கற்பினின் வழாஅ நற்பல உதவி
பெற்றோற் பெட்கும் பிணைய ஆக'

என வாழ்த்தியதாக அகநானூறு கூறுகிறது.

சிலப்பதிகாரத்தில் முதல் கதைப் பகுதியே 'மங்கல வாழ்த்துக்கதை' - அக்கதைப் பகுதியில் கோவலன் - கண்ணகி திருமண நிகழ்ச்சி கூறப்படுகிறது.

'காதலர்ப் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்
தீதறுக என ஏத்திச் சின்மலர்கொடுதூவி'

என கோவலனும் கண்ணகியும் வாழ்த்தப் பெறுகின்றனர்.

பல காப்பியங்களிலும், இலக்கியங்களிலும் திருமண வாழ்த்து இடம் பெற்றுள்ளது. கந்த புராணத்தில் வள்ளி - முருகன் திருமணத்தின்போது

'புல்லிய குறவர் மாதர்
பொருவல்சீர் முருகன் தானும்
வல்லியும் மின்னே போல
வைகலும் வாழ்க என்று
சொல்லியல் ஆசி கூறி
தூமலர் அருகு தூர்த்தார்.'

என வாழ்த்து கூறப்படுகிறது.

மங்கலம் என்ற சொல்லுக்கு, சுபம், ஆக்கம், நன்மை, திருமணம், நற்செய்கை, சிறப்பு, வாழ்த்து, ஆசி, வளம் என்று பல பொருள் கூறப்படுகிறது. மங்கலம் என்ற சொல்லுக்கும் மாங்கல்யம் என்ற சொல்லுக்கும் தொடர்பு உண்டு. தாலி மங்கல அணி என்று இலக்கியம்

கூறுகிறது. 'மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்' என்று கண்ணகி குறிக்கப் பெறுகிறார்.

**கைகோர்வையும், மங்கல வாழ்த்தும்.**

திருப்பூட்டுதல், மாங்கல்ய தாரணம் என்னும் மங்கல் அணி அணிவித்த பின் மண மேடையில் மாப்பிள்ளையின் எதிரில் முக்காலி ஒன்று போடப்பட்டு அதன்மீது ஒரு தட்டை நிறை அரிசியுடன் வைப்பர். அரிசியின் மேல் வெற்றிலை பாக்கும் அதன்மீது ஒரு அச்சு வெல்லமும் வைக்கப்படும். மணப்பெண்ணின் சகோதரரையோ, சகோதரர் இல்லாவிடில் சித்தப்பா,பெரியப்பா மக்களையோ மாப்பிள்ளையின் முன் அமரச்செய்வர். அவருக்குச் சிறு மாலை போடப்படும்.

அருமைக்காரர் மாப்பிள்ளை கையையும், மணப்பெண்ணின் சகோதரர் கையையும் கோர்க்கச் செய்து அரிசியினுள் பதிய வைப்பார். அருமைக்காரர் பிள்ளையாரை வணங்கி வெற்றிலை பாக்குக்கொடுத்து குடிமகனாகிய மங்கலனை மங்கல வாழ்த்து இசைக்கக் கூறுவார். குடிமகன் அரிசித் தட்டுக்கு எதிரில் மணமகனுக்கும் மணப்பெண்ணின் சகோதரருக்கும் இடையில் நின்று தட்டில் உள்ள அரிசியை எடுத்துத் தன் கையில் உள்ள வெற்றிலையில் வைத்துக்கொண்டுமங்கல வாழ்த்தை விநாயகர் வணக்கத்துடன் இசைக்கத் தொடங்குவார். ஐந்து அல்லது ஆறு வரி இசைத்து முடித்தபின் இசைப்படி நிறுத்திக்கையில் உள்ள அரிசியில் சிறிதை எடுத்து தட்டில் உள்ள அரிசியில் போடுவார்.

அப்போது எல்லா வாத்தியமும் அடங்கி குடிமகன் இசைப்பதை நிறுத்தும்போது மட்டுமே மத்தளத்தில் ஒரு தட்டு தட்டுவர். மங்கல வாழ்த்து முடிந்தபின் சகல வாத்தியம் முழங்கும்.

**மங்கல வாழ்த்தின் தோற்றம்.**

மங்கல வாழ்த்தின் தோற்றத்திற்கு ஒரு வரலாற்று நிகழ்ச்சி கூறப்படுகிறது. இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் காவிரி வெள்ளப்பெருக்கெடுத்து ஓடியது. கரிகாலன் அமைத்த கரைகளைக் கடந்து விளைநிலம் எங்கும் வெள்ளம் பரவியது. எவ்வித முயற்சிகள் செய்தும் காவிரியின் சீற்றம் அடங்கவில்லை. குடிமக்கள் அரசரிடம் முறையிட்டனர். அசரீரி வாக்கொன்று சக்தியுடைய அருட்கவிஞர் ஒருவர் அடங்கு என்று சொன்னால் வெள்ளம் அடங்கும் என்று கூறியது. கவிச்சக்கரவர்த்தி கம்பரே அத்தகு கவிஞர் என்று கூற எல்லோரும் கம்பரை வேண்டினர்.

**கம்பர் காவிரியை நோக்கி,**

'கன்னி அழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரைகடந்து போயினள்என்று - இன்னீர்
உரைகடக்க லாமோ உலகுடைய தாயே
கரைகிடக்கல் ஆகாது காண்'

என்று பாடவே காவிரி கரைக்குள் அடங்கியது.

அரசன் மனமகிழ்ந்து இனிமேல் வேளாளர்கள் அரசனுக்குக் கொடுக்க வேண்டிய திருமண வரியைக் கம்பருக்குக்கொடுங்கள் என்று ஆணை பிறப்பித்து

'கதுவி வருபொன்னி கரைகடவா வண்ணம்
பதுமமுகக் கம்பரவர் பாட - வதுவைவரி
மாடை அரைக்கழஞ்சு வண்கம்பர்க்கு ஈந்தபரிசு
ஏடர் குலோத்துங்கன் எழுத்து'

எனச் செப்பேடும் வெட்டித் தந்தார்.

வேளாண் குடிமக்களிடம் வதுவை வரி பெற்ற கம்பர் அதற்கு ஈடாக வேளாளர் திருமணத்திற்குப் பாட மங்கல வாழ்த்துப் பாடிக்கொடுத்தார் என்பர். எனவே கொங்கு வேளாளர் திருமண மங்கல வாழ்த்தைக் கம்பர் பாடினார் என்று மக்கள் நம்புகின்றனர். மங்கல வாழ்த்தில்

'கம்பர் சொன்ன வாக்குரைத்து
மங்கலமும் கன்னி சொல்ல'

என்று தொடர் வருகிறது என்பர். சிலர் பாடும் மங்கல வாழ்த்தில்

'என் குரு கம்பர் இணையடி வாழ்க'

என வருவதால் இது கம்பரின் சீடர் யாராவது பாடியிருக்கவும் கூடும் என்று கூறுகின்றனர்.

யார் பாடியதோ? இலக்கிய நயமுடைய திருமண மங்கல வாழ்த்தொன்று வேளாளர்கட்குக் கிடைத்தது. திருமண நிகழ்ச்சிகள் பெரும்பாலும் மங்கல வாழ்த்தில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இது வாய்மொழி இலக்கியமாக வழிவழியாகப் பாடப்பட்டு வரும் பாடல் ஆகும்.

காலப்போக்கில் மங்கல வாழ்த்து இடத்துக்கு இடம் சில தொடர்கள் வேறுபாட்டைப் பெற்றது. சிலர் சில புதுவரிகளைச் சேர்த்தனர். சிலர் சில வரிகளை நீக்கினர்.

❖❖❖❖


# மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | V.தினேஷ்குமார் B.E., |
| பிறந்த தேதி & நேரம் | : | 19-01-1983, 3.43 p.m. (15.43 hrs) |
| நட்சத்திரம் | : | பூரட்டாதி 4ம் பாதம் |
| இராசி | : | மீனம் |
| இலக்கினம் | : | மிதுனம் |
| தகப்பனார் பெயர் | : | K.வரதராஜன் B.Com., |
| தாயார் பெயர் | : | V.வசந்தா |
| உடன் பிறந்தவர் விபரம் | : | ஒரு தங்கை, திருமணமாகிவிட்டது (Software Engineer) |
| சொந்த ஊர் | : | இராசிபுரம் / சென்னை |
| கல்வி | : | B.E., (ECE) |
| வேலை | : | Own Export Business in Chennai and In Melbourne, Australia |
| சம்பளம் | : | Rs. 40 Lakhs per year |
| குலம் / கூட்டம் | : | பண்ணை குலம், கீரம்பூர் எட்டுக்கை அம்மன் |
| சொத்து விபரம் | : | சென்னையில் சொந்த வீடு, சொந்த வீட்டு மனை, சொந்த பேக்டரி மற்றும் ஊரில் 12 ஏக்கர் நிலம் |
| தொடர்பு | : | 98840 43734, 98842 21111, 044-2223 7084 |

| | | | |
|---|---|---|---|
| சந் | மாந் | | ராகு 1லக் |
| செவ் | இராசி | | |
| சூ சுக் | | | |
| கேது புத(வ) | குரு | சனி | |

| | | | |
|---|---|---|---|
| | | மாந் | கே |
| சூ | நவாம்சம் | | சந் |
| சனி | | | சுக் |
| ராகு செ புத(வ) | | குரு 1லக் | |

# வாழ்த்துகிறோம்



நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் (NLC)-ல் துணைத் தலைமைப் பொறியாளராய்ப் பணியாற்றிவருபவரும், திருச்செங்கோடு மணியனூர் கிராமத்தைச் சேர்ந்தவருமான திரு. C.ஈஸ்வரன் - திருமதி. வசுமதி ஆகியோரின் மகன் செல்வன் E.செந்தூர் குமரன் நெய்வேலி ஜவகர் பள்ளியில் 2009-ஆம் ஆண்டு +2 தேர்வில் (CBSE) 464/500 மதிப்பெண்கள் பெற்றார்.

இவர் **2008** - 2009 ஆம் ஆண்டு IIT நுழைவுத்தேர்வில் அகில இந்திய அளவில் **325** ம் இடமும், OBC யில் **36** ஆம் இடமும் பெற்று சாதனை புரிந்துள்ளார். தற்போது IIT சென்னையில் Mechanical Engineering பிரிவில் படித்து வருகிறார்.

நுழைவுத் தேர்வில் சிறப்பான Rank பெற்று சாதனை புரிந்துள்ள செல்வன் E.செந்தூர் குமரன் மேலும் பல சாதனைகள் புரிய கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖

## மணமகள் தேவை

வயது 24, செம்பூத்தன், 160 செ.மீ. சிகப்பு, பூரட்டாதி 1, கும்ப ராசி சிம்மலக்னம், செவ்வாய் இல்லை, ராகு/கேது இல்லை, B.E., (CSE) முடித்து சென்னையில் S/W இன்ஜினியராக உள்ளார். இளைய சகோதரி 1 MBBS. தந்தை, கல்லூரிப் பேராசிரியர், தாயார், அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர். ஊர் - பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

சொந்த தொழில் அல்லது பணியில் உள்ள, சம படிப்பு மற்றும் அந்தஸ்துள்ள மணமகன் தேவை.

தொடர்புக்கு :

04294-221210, 94427 55006

❖❖❖❖

## மணமகன் தேவை

மணியன் கூட்டம், 32 வயது, B.Sc., உயரம் 5'3'' மாநிறம், அஸ்த நட்சத்திரம், செவ்வாய் இல்லை. தந்தை, கிருஷ்ணகிரியில் விவசாயம். வியாபாரம், படித்த நல்ல உத்யோகம் அல்லது தொழில் செய்யும் மாப்பிள்ளை தேவை.

தொடர்புக்கு :

**டி.கே.சுப்ரமணியன்**

திருமணமாலை
திருமணத் தகவல் மையம்
60, மேகசின் சாலை, பட்ரோடு,
பரங்கிமலை, சென்னை - 600 106
செல் : 044-22311411, 98403 64348

❖❖❖❖

# வானம் தொடலாம் வாங்க !

– சிந்தனைக் கவிஞர் கவிதாசன்

**பள்ளி, கல்லூரிகளில் படிக்கும்போதே, பேச்சாற்றல், எழுத்தாற்றலை வளர்த்துக்கொள்ள என்ன செய்யவேண்டும்** ?

ஒருவருடைய முன்னேற்றத்திற்குப் பேச்சாற்றல் மிகவும் இன்றியமையாதது, பேச்சாற்றல் என்பது மேடையில் பேசுவது என்று மட்டுமே எண்ணி விடாதீர்கள். ஒருவருடைய உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை மற்றவர்களுக்கு முறையாகவும் சரியாகவும் தக்கசமயத்தில் வெளிப்படுத்துவதே பேச்சாற்றல்.

உங்களுடைய மனதில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் தோன்றலாம். ஆனால் அவ்வெண்ணங்களை மற்றவர்களுக்குச் சொல்லும் திறன் உங்களுக்கு இல்லை என்றால், அவ்வெண்ணங்களால் உங்களுக்கும் சமுதாயத்திற்கும் எவ்வித நன்மையும் இல்லை.

ஆகவே, நமது மனத்தில் தோன்றும் எண்ணங்களை வெளிப்படுத்தும் ஆற்றலை இளமைப்பருவம் முதற்கொண்டே வளர்த்துக்கொள்வது மிகவும் அவசியம்.

'பேச பேசத்தான் பேச்சு வரும், எழுத எழுதத்தான் எழுத்து வரும்' என்பார்கள்.

ஆகவே உங்களுடைய எண்ணங்களை, உங்களுடைய பேச்சாற்றல் மூலமாகவும், எழுத்தாற்றல் மூலமாகவும் வெளிப்படுத்தும் திறனை வளர்த்துக்கொள்ளும் பயிற்சியை படிக்கும் பருவத்திலேயே வளர்த்துக்கொண்டு வாழ்வில் முன்னேறுங்கள்.

**சாதனைகள் புரிய அதிகாலையில் எழுந்து படிக்க வேண்டும்**?

அதிகாலை நேரத்தில் மனம் தெளிவாகவும் அமைதியாகவும் இருக்கும். ஆகவே அப்பொழுது படிக்கும் பாடம் மனதில் அப்படியே பதிந்து விடும் என்பதால்தான் அதிகாலை நேரத்தில் எழுந்து படிப்பது மிகவும் நல்லது என்று சொல்கிறார்கள். ஒருவர் 7, 8 மணி நேரம் தூங்கினால் போதும். அதற்கு அதிகமாகத் தூங்கும்போது சோம்பேறித்தனம்தான் ஏற்படும்.

மேலும் இந்த உலகில் வெற்றி பெற்றவர்களிடம் இயல்பாகவும் பொதுவாகவும் இருக்கும் ஒரு பழக்கம் என்னவென்றால், அதிகாலை 5 மணிக்கெல்லாம் எழுந்து தமது கடமைகளைச் செய்யத் தொடங்குவது. கொஞ்சம் எண்ணிப்பாருங்கள். படுக்கையில் இருந்து எழுவதிலேயே நம்மால் ஜெயிக்க முடியவில்லை என்றால் வாழ்க்கையில் எவ்வாறு ஜெயிக்கப் போகின்றோம்.?

ஆகவே, போர்வைக்குள் போராட்டம் நடத்துவதை விட்டுவிட்டு, அதிகாலையில் எழுந்து படிப்பதை உங்களுடைய பழக்கமாக்கிக்கொள்ளுங்கள். மதிப்பெண்களும் கூடும், மதிப்பும் உயரும்.

**2020 இல் இந்தியா வல்லரசு ஆக வேண்டும். அதற்கு மாணவர்களாகிய எங்களின் பங்கு என்ன** ?

கி.பி.2020–ல் இந்தியா வளர்ந்த நாடாக, தன்னிறைவைப் பெற்ற நாடாக வரவேண்டும் என்பது தான் நமது இலட்சியம். அதற்கான செயல்திட்டத்தை நமது முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் A.P.J.அப்துல் கலாம் அவர்கள் தனது நூலான 'இந்தியா 2020' ல் தெளிவாகக் கொடுத்துள்ளார்கள்.

நமது தேசம் நூறு சதவீதம் கல்வியறிவு பெற்ற நாடாக, ஊழல் இல்லாத நாடாக, எல்லோருக்கும் மருத்துவ வசதி கிடைக்கும் நாடாக, வறுமை, பசி, வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவை இல்லாத நாடாக, தனிமனித வருமானமும் வாங்கும் திறனும் (Buying Power) அதிகம் கொண்ட நாடாக 2020 க்குள்ளாக வரவேண்டும். அதற்கு ஒவ்வொரு இந்தியரும் தனது பங்கைச் செலுத்தவேண்டும். அப்பொழுதுதான் நமது இலட்சியம் நிறைவேறும்.

குறிப்பாக இன்றைய மாணவர்கள்தான் 2020-ல் அமைச்சர்களாக, ஆட்சியாளர்களாக, பொறியாளர்களாக மருத்துவர்களாக, ஆசிரியர்களாக, தொழில்முனைவோராக, எழுத்தாளராக, பத்திரிக்கையாளர்களாக, பல்வேறு பொறுப்புகளை வகிக்க உள்ளார்கள். ஆம் ! இன்றைய மாணவர்களின் கையில்தான் நாளைய இந்தியா இருக்கின்றது.

ஆகவே, நாளைய இந்தியாவை வழிநடத்தத் தேவையான தலைமைப்பண்பு, தியாக உள்ளம், நேர்மை, சகிப்புத்தன்மை, மனித நேயம், தேசப்பற்று, முடிவெடுக்கும் திறன், திட்டமிடும் ஆற்றல் ஆகியவற்றைப் படிக்கும் காலத்திலேயே வளர்த்துக்கொள்ளவேண்டும். அத்தோடு, படிக்கும் காலத்தில் கவனம் சிதறாமல் படிப்பின் மீது மட்டுமே கவனம் செலுத்தி முன்னேற வேண்டும்.

படிக்கின்ற காலத்தில் நன்றாகப் படிக்கவில்லை என்றால், உங்களுடைய வாழ்க்கையை நன்றாக அமைத்துக்கொள்ள முடியாது ஆம் ! மற்றவர்களை வழிநடத்தவேண்டும் என்றால், முதலில் உங்களை நீங்களே தயார்படுத்திக்கொள்ளவேண்டும். "நான் முன்னேறினால் எனது தேசம் முன்னேறும்" என்ற

சிந்தனையோடு ஒவ்வொரு மாணவரும் படித்து முன்னேறும்போது, நமது இந்தியா நிச்சயம் முன்னேறிவிடும்.

**படிப்பிலும், விளையாட்டிலும் எப்படி முதலாவதாய் வருவது?**

படிப்பு மற்றும் விளையாட்டு என இரு துறைகளிலும் முதலாவதாக வருவது சற்று சிரமம்தான். ஏனென்றால் ஒரே நேரத்தில் இரண்டிலும் முழுமையாகக் கவனம் செலுத்துவது கடினமானது. ஒருசிலர் இவ்விரண்டு துறைகளிலும் முன்னிலையில் இருப்பதை நான் அறிவேன்.

இவ்விரண்டில், உங்களுக்குப்பிடித்த உங்களுடைய திறமை அதிகமிருக்கும் ஏதாவது ஒன்றைத் தேர்ந்து அதில் முழுக்கவனம் செலுத்தி முதன்மை பெறலாம். மேலும், நீங்கள் விளையாட்டில் முழுக் கவனம் செலுத்துவதாயின், படிப்பிலும் ஓரளவுக்குக் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்றால் குறைந்தபட்ச கல்வித்தகுதி உங்களுடைய வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது.

சிலர் விளையாட்டு, விளையாட்டு என்று படிப்பில் குறைந்தபட்ச கவனம் கூட செலுத்தாமல், முழு ஆண்டுத்தேர்ச்சி பெறாமல் போவதும், பிறகு அதில் தேர்ச்சி பெறுவதற்காக விளையாட்டை விட்டுவிடுவதும் நான் பார்த்திருக்கிறேன். ஆகவே எதையும் திட்டமிட்டுச்செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். எதைச் செய்தாலும், அதைச் சிறப்பாகச் செய்து முதன்மை பெற வேண்டும்.

**வாழ்க்கையில் ஒரே இலட்சியத்தை மட்டும் எடுத்துக்கொண்டு செயல்படுவதா? பல லட்சியங்களை மனதில் கொண்டு முயற்சி செய்வதா?**

வாழ்க்கையில் ஒரே ஒரு இலட்சியத்தை மட்டுமே வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உங்கள் முழுத்திறனையும் அதில் காட்டி வெற்றிச்சிகரத்தை அடைய முடியும். பல்வேறு இலட்சியங்கள் இருப்பதால் ஆற்றலும் உழைப்பும் பல திசைகளில் சிதறுவதால் எந்த ஒரு பெரும் வெற்றியையும் அடையமுடியாமல் போக நேரிடும். இதைத்தான் இந்திய இளைஞர்களின் விடிவெள்ளி சுவாமி விவேகானந்தரும், “ஏதாவது ஒரு குறிக்கோளை எடுத்துக்கொள்ளுங்கள். அதையே உங்களுடைய வாழ்க்கையாகவும் அமைத்துக்கொள்ளுங்கள். அதைப்பற்றியே சிந்தியுங்கள். அதற்காகவே உழையுங்கள். உங்களுடைய நரம்பு, தசைகள், இரத்தம், மூச்சு என அனைத்தையும் அந்த இலட்சியத்தால் நிறையுங்கள். பின்னர் அந்த இலட்சியமாகவே மாறி விடுங்கள்” என்று கூறினார்.

ஆகவே, ஒரே ஒரு உன்னத இலட்சியத்தை எடுத்துக்கொண்டு அதற்காக வாழுங்கள். அந்த லட்சியத்தின் மூலமாக நீங்கள் மட்டும் பயன்பெற்றால் போதாது, மனிதகுலமே பயன்பெற வேண்டும் என்பதிலும் கவனமாக இருங்கள். நிச்சயம் உங்களுடைய இலட்சியம் வெல்லும்.

இலட்சியம் இல்லாத வாழ்க்கை சிறகில்லாத பறவை; சுவையில்லாத கரும்பு; மணமில்லாத மலர். ஆகவே உன்னத இலட்சியத்தை உள்ளத்தில் வைத்து நன்கு படித்து முன்னேறுங்கள். நல்ல எதிர்காலம் உங்களுக்காகக் காத்திருக்கிறது.

**கவனம் சிதறாமல் படிப்பது எப்படி?**

ஒன்றைச் செய்யும்போது அதில் ஆர்வமும் ஈடுபாடும் இருந்தால் நிச்சயமாகக் கவனம் சிதறாது. எடுத்துக்காட்டாக, உங்களுக்குப் பிடித்த திரைப்படத்தையோ, விளையாட்டையோ பார்த்து ரசிக்கும் போது கவனம் சிறிதளவும் சிதறுவதில்லையே ! ஏன்? உங்களுக்கு அதன்மீது உள்ள ஆர்வமும் முழு மன ஈடுபாடும்தான் காரணம்.

ஆகவே, படிப்பின் மீது உங்கள் விருப்பத்தையும் ஈடுபாட்டையும் முழுமையாகச் செலுத்தவேண்டும். "நான் நன்றாகப் படித்தால் எனது எதிர்காலம் சிறப்பாக இருக்கும். எனது வாழ்க்கையின் இலட்சியத்தை அடைவதற்காகப் படிக்கின்றேன். இன்று தலைகுனிந்து படிக்கிறேன். நான் இன்று தலைகுனிந்து நடப்பதெல்லாம் நாளை தலைநிமிர்ந்து நடப்பதற்காக" என்ற எண்ணத்தை மனதில் எந்நேரமும் நினைத்துக்கொண்டே இருங்கள். படிப்பின் மீது உங்களுக்குக் கவனம் அதிகரிக்கும்.

மனம் சோர்வடைந்து ஈடுபாடு குறையும்போது உங்களுக்கு ஊக்கம் தரும் நூல்களைப் படியுங்கள். அத்தோடு உங்களுக்கு உற்சாகம் கொடுக்கும் ஆசிரியர்களிடம் சென்று ஆலோசனை பெறுங்கள்.

மேலும் படிக்கும்போது, வரிக்கு வரி, உங்களுடைய ஆள்காட்டி விரலை வைத்துக்கொண்டு படியுங்கள். அதனால் கவனம் சிதறாமல் இருப்பதுடன், ஆள்காட்டி விரலை கொஞ்சம் கொஞ்சமாக வேகமாக நகர்த்தி உங்களுடைய வாசிக்கும் வேகத்தையும் (Readng Speed) அதிகப்படுத்திப் பயனடையுங்கள்.

உற்சாகமும், எதிர்கால இலட்சியமும், தன்னம்பிக்கையும் உங்களுடைய உள்ளத்தில் நிலையாக இருக்கும் போது, படிப்பில் கவனம் சிதற வாய்ப்பே இல்லை. ஈடுபாடு இருந்தால் உற்சாகம் இருக்கும். உற்சாகம் இருந்தால் உலகையே ஆளலாம்.

❖❖❖❖